**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண்.28/2021

நாள் : 09.04.2025

பி.வா.சா.1 திருமதி. உமாமகேஸ்வரி மனு உத்தரவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**முதன்மை விசாரணை தொடர்ச்சி**

எனது கூடுதல் முதன்மை விசாரணை சாட்சியத்தை கூடுதல் நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

ஆவணங்கள்

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | 13.07.1970 | பி.சா.ஆ.6 | பார்வதியம்மாள் தன் மகன் முனி என்ற ரமணிக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் | அசல் |
| 2) | 24.07.2018 | பி.சா.ஆ.7 | முனி பெயரில் உள்ள பட்டா | Online Copy |
| 3) | -- | பி.சா.ஆ.8 | சர்வே எண்.38 க்கான Town Survey Field Register | உண்மை நகல் |
| 4) | -- | பி.சா.ஆ.9 | தாவா வீட்டைக்காட்டும் புகைப்படம் (Negative & CD தாக்கல் செய்யவில்லை, வாதி தரப்பு வழக்கறிஞர்களின் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) | அசல் |
| 5) | -- | பி.சா.ஆ.10 | 1ம் வாதியின் வீட்டின் முகப்பினை காட்டும் புகைப்படம் – 2 ( Negative & CD தாக்கல் செய்யவில்லை, வாதி தரப்பு | அசல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழக்கறிஞர்களின் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) | |
| 6) | -- | பி.சா.ஆ.11 | ரமணி பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகள் (8 Nos.) | அசல் |
| 7) | -- | பி.சா.ஆ.12 | ரமணி பெயரில் உள்ள மின்கட்டண ரசீதுகள் (3 Nos.) (ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) | Online Copy |
| 8) | 27.07.2015 | பி.சா.ஆ.13 | என் பெயரில் உள்ள தண்ணீர் உபயோக கட்டணம் செலுத்தியதற்கான ரசீது. | அசல் |

மேற்படி பி.சா.ஆ.7 மற்றும் பி.சா.ஆ.12 ஆகியவை வளைத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட எலக்ட்ரானிக்ஸ் எவிடன்ஸ் என்பதால் இந்திய சாட்சிய சட்ட பிரிவு 65 B (4) ன்படி சான்றிதழ் இணைக்கப்படவில்லை. எனவே மேற்படி சான்றிதழ் தாக்கல் செய்வதை பொறுத்து மேற்படி ஆவணத்தின் ஏற்றுக்கொள்ளும் தன்மை குறித்து பின்னர் தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/-ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .